அதை அனுமதித்திருப்பதாக எனக்கு தகவல் தந்திருக்கிறீர்கள். ஆனால் இதுவரையில் அந்தத் தீர்மானம் அவைக்கு வரவில்லை. எதற்கெடுத்தாலும் விதி விதி என்று.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியின் கீழ்தான் நான் இங்கு அமர்ந்திருக்கிறேன். அதுவே எனக்கு பாதுகாப்பு இல்லை என்றால் திரு. இராமலிங்கம் அவர்களது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ன நிலையில் இருக்கிறது என்பதைப்பற்றி சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்டு கூடுமான வரையில் ஆவன செய்கிறேன்.

(5) கவனஈர்ப்புகள்.

(அ) மழையினால் பாதிக்கப்பெற்றுள்ள தஞ்சை மாவட்டத்தில் கெடுபிடியாக நிலவரி வசூல் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு மா. மணி மாறன் அவர்கள் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, "1978 ஆம் ஆண்டு அக்டோபரில் தொடங்கிய மழை, வழக்கத் திற்கு மாறாக 1979 ஆம் ஆண்டு சனவரி இரண்டாவது வாரத் தொடக்கம் வரை பெய்ததின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் குறைவினால் வேறு தொழிலோ வருவாயோ இல்லாமல் உணவிற்கும், சில்லறை செலவிற்கும் போதுமான விவசாய வருவாய் இல்லாத நிலையில், விவசாயிகளிடம் தனி வரி வசூலில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, புயல், மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி, தண்ணீர் மேல்வரி, சிறப்பு வரி ஆகியவற்றை தள்ளுபடி செய்து கொடுக்க வருவாய் வாரிய நிலை ஆணைகளில் வழிவகையுள்ளது.

1979 மார்ச் 8] [திரு. பி. முசிரிபுத்தன்]

1977–ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் திங்களில் உண்டான புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பயிர்களின் விளைவு ஆறு அணாவும் (37 பைசா) அதற்குக் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தால் 1387 ஆம் பசலிக்குரிய நிலவரி, தண்ணீர் மேல் வரி, உள்ளாட்சி மேல் வரி, கூடுதல் நஞ்சைத் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, சிறப்பு நஞ்சைத் தீர்வை, சிறப்பு தண்ணீர் மேல்வரி, பணப்பயிர்களுக்குண்டான வரி ஆகியவற்றை வருவாய் வாரிய நிலை ஆணையின்படி தள்ளுபடி செய்து அரசு உத்திரவிட்டது. மேலும், நிலவரி, தண்ணீர் மேல் வரி, உள்ளாட்சி மேல் வரி, கூடுதல் நஞ்சைத் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி ஆகியவற்றிற்கான பழைய பாக்கிகளை 1387 ஆம் பசலியில் வசூலிப்பதை 1388 ஆம் பசலிக்கு ஒத்தி வைத்தும் அரசு ஆணை பிறப்பித்தது. இதேபோல், 1978–ஆம் ஆண்டில் பெய்த பலத்த மழையினாலும், அதனால் ஏற்பட்ட வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பயிர்களின் விளைவு ஆறு அணாவும் (37 பைசா) அதற்குக் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தால் 1388 ஆம் பசலிக்குரிய நிலவரியை வருவாய் வாரிய நிலை ஆணையின்படி தள்ளுபடி செய்து கொடுக்கும் அல்லது ஒத்திவைக்கும் விஷயம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எங்கெங்கு நிலவரி தள்ளுபடி செய்து அல்லது வசூல் ஒத்தி வைத்து ஆணையிடப்படுமோ அங்கெல்லாம் சிறப்பு வரியும் தள்ளுபடி செய்யப்படும் அல்லது வசூலிப்பு ஒத்தி வைக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, ஒத்திவைக்கப்படும் என்று பேரவைச் செயலர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எந்தப் பகுதியில் என்று அவர்கள் சொல்லவில்லை. மூன்று மாதங்கள் தொடர்ந்து பெய்த மழை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியில் அனாவாரி சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது பேரவைச் செயலர் அவர்கள் ஒத்தி வைக்கப்படும் என்று சொன்னாலும் எந்தப் பகுதியில் என்று சொல்லவில்லை. சென்ற ஆண்டு ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு வழங்கப்பட்ட பிறகு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு தொடர்ந்து மூன்று மாதக் காலம் மழை பெய்திருப்பதன் காரணமாக இன்று தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வருவாயே இல்லை, இந்தப் புரட்சி அரசு 22 கோடி ரூபாய் கமர்ஷியல் டாக்ஸ் வசூலிப்பதை 1977–78 ல் விட்டிருக்கிறது. இந்த ஆண்டு பட உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு தர அரசு முன்வந்திருக்கிறது. இப்படி பல்வேறு வகையில் புரட்சித் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு விவசாயிகளின் பிரச்சினைகளை அருள்கூர்ந்து கவனித்து நிலவரியைத் தள்ளுபடி செய்ய முன்வருமா?

திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சென்னை டி. வி. எஸ். தொழில் நிறுவனத் தகராறு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் மு. அம்பிகாபதி, அ. ரகுமான்கான், ரா. உமாநாத், கு. ரமணி, சி. கோவிந்தராசன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், நா. பழனிவேல், வி. கே. கோதண்டராமன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. மு. அம்பிகாபதி.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, ''சென்னை டி. வி. எஸ். நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்கள் நிர்வாகத்தின் பழிவாங்குதலைக் கண்டித்தும், அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரியும் 7–3–1979 முதல் சென்னை தொழிலாளர் ஆணையர் அலுவலகம் முன்பு 'தார்ணா' போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, டி. வி. எஸ். குரூப் நிறுவனங்களில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களும் அவற்றின் எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து இயங்கி வருகின்றன;–

	வேலைசெய்யும் தொழிலாளர்கள்.	தேதி
(1)	(2)	(3)
1. சுந்தரம் கிளேட்டன் ..	1,320	29–9–1977
2. லூகாஸ் டி. வி. எஸ். ..	2,473	29–9–1977
3. பிரேக்ஸ் இண்டியா லிமிடேட்	1,514	13–12–1977